**9. அங்கீரர் கதை**

அங்கீரர் என்பவர் நான்முகனுடைய மக்களில் ஒருவர். அருந்தவத்தினாலும் திருந்திய பண்பினாலும் சிறப்புகள் எல் லாம் ஒருங்கே அமையப்பெற்றவர். இவர் முதலில் இல்ல றத்தில் இருந்து மக்கள் பலரைப் பெற்றார். பிறகு சிறந்த



வழியாகிய தவ வழியைப் பின்பற்றிச் சீரிய தவத்தைச் செய்து எழுமுனிவர்களில் ஒருவராகச் சிறப்படைந்து நின் றார். இவர் காட்டில் தவஞ்செய்து கொண்டிருக்கும்பொழுது யகுரதன் என்னும் பெயருடைய  அரக்கர் மன்னன் ஒருவன் இவரைக் கண்டான். "நீர் யார்? உம்முடைய பெயர் என்ன ? எவ்வூர் ? எதற்காக இப்படித் தவஞ்செய்கிறீர் ?' என்று பல கேள்விகளைக் கேட்டான். இக்கேள்விகளுக்கு அங்கீரர் யாதும் மறுமொழி கூறவில்லை. எல்லாவற்றிற்கும் புன்னகை புரிந்துகொண்டிருந்தார். இவர் தன்னை இகழ்ச்சி செய்கிறாரென்று அரக்கர் மன்னன் எண்ணினான். தன் கையி லிருந்த வில்லை வளைத்துக் கணைகள் பலவற்றை அங்கீரர் மீது செலுத்தினான். அக்கணைகள் யாவும் இவருக்கு எத் தகைய தொல்லையையும் விளைக்காமல் அழிந்து போயின. இதனால் வெகுண்ட அரக்கர் வேந்தன் உடைவாளை உரு விக்கொண்டு இவரை வெட்ட வந்தான். அப்பொழுது நிலம் 'படீர்" என்று வெடித்தது. அவ்வொலியைக் கேட்டு அரக் கன் அஞ்சி நடுங்கினான். உடனே அவ்வெடிப்பில் வீழ்ந்து மறைந்துபோனான். அதனைக் கண்ட இவர் இரங்கியெழுந் தார். அவனை வெளியே விடுமாறு நிலமகளை வேண்டினார். இவருடைய அருளுடைமையை வியந்து நிலமகளும் அக் கொடியோனை வெளியே தள்ளினாள். அரக்கன் முனிவரு டைய அடிகளில் வீழ்ந்து தன்னுடைய பிழையைப் பொறுக் குமாறு வேண்டினான். முனிவர் அவனுக்கு அருள்செய்து அனுப்பினார். அவனும் நல்லறிவு பெற்றுச் சென்றான். பெரி யோர்கள் எப்பொழுதும் தம்முடைய நிலையில் இருந்து சிறி தும் மாறுபடமாட்டார்கள் என்பதற்கு இம் முனிவர் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தார்.

[சான்றோர் தந்நிலையில் திரியார்]